
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1142

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

55

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

'தேசத்தந்தை' காந்தியடிகள் மறைவின் போது 'முஸ்லிம்கள்தான் கொன்றனர்' என்ற வதந்தி காட்டுத்தீயாகப் பரவியபோது, தமிழ்நாட்டில் பெரியார் அதன் உண்மைத் தன்மையை எப்படி வலியுறுத்தினார் என்பதை கடந்த வாரம் பார்த்தோம்.

ஆனால், காந்தியடிகள் கொலைக்குப் பின்னால் நடந்த சதிகள் அம்பலமாகி பல பத்தாண்டுகள் ஆகிவிட்டபோதிலும், அதற்கு காரணமானவர்கள் எவரும், இன்றுவரை எந்தவிதமான குற்றவுணர்ச்சிக்கும் ஆளாக வில்லை. மாறாக, காந்தியடிகளைக் கொன்ற கோட்சேவிற்கு மாலை சூட்டுவதும், காந்தியின் புகைப்படத்தை வைத்து அவரது நினைவு நாளில் குத்திக் கிழிப்பதையும் வாடிக்கையாக, வழக்கமாகவே மாற்றியுள்ளனர். அப்படிச் செய்வோரை எம்.பி.யாக்கியும் அழகு பார்த்திருக்கிறது பாரதிய ஜனதா கட்சி.

உண்மையில், காந்தி கொலை என்பது திடீரென திட்டமிட்டு நடத்தப்பட்டது அல்ல. அதற்குப் பின்னால் நீண்ட சதி இருந்தது என்பதை விளக்குகிறார் குஜராத்தைச் சேர்ந்த, 'பூமி புத்ரா' என்ற பத்திரிகையின் ஆசிரியர் சுனிபாய் வைத்யா. அந்தச் சதிவலையை, தனது நூலில் ஆதாரபூர்வமாக பதிவு செய்துள்ளார். சர்வோதய இயக்கத்திலும், வினோபாவின் பூமிதான இயக்கத்திலும் பங்கு பெற்றவர் இவர், காந்தியைக் கொல்ல 9 முறை முயற்சிகள் நடந்தன என அம்பலப் படுத்தியுள்ளார்.

இந்தக் கொலைமுயற்சிகள் குறித்து அறிந்த காந்தி, "இதுவரை கொலை முயற்சியிலிருந்து எனது உயிர் 7 முறை காப்பாற்றப்பட்டிருக்கிறது. நான் அவ்வளவு சீக்கிரம் இறந்துவிட மாட்டேன். 125 ஆண்டுகள் வரை நான் உயிர் வாழ்வேன்" என்று கூறியதற்கு, 'அக்ரனி' என்ற மராத்திய பத்திரிகையில் பதில் கொடுத்த நாதுராம் கோட்சே, "அதுவரை யார் உங்களை உயிருடன் விட்டுவைக்கப் போகிறார்கள் பார்ப்போம்" என்று மிக துணிச்சலாகக் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். அதன் பின்பு, 1948-ஆம் ஆண்டு, ஜனவரி 20-இல் வெடிகுண்டு வீசியும் கொலைமுயற்சி நடந்தது. அதன்பிறகுதான், கோட்சேவால் சுடப்பட்டு காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

அந்தப் படுகொலைக்கு 10 நாட்களுக்கு முன்பு சதித்திட்டம் தீட்ட ரகசிய கூட்டம் ஒன்று நடந்தது. அந்த ரகசிய கூட்டத்தில் 6 பேர் இருந்தனர். நாராயணன் ஆப்தே, நாதுராம் கோட்சே, கோபால் கோட்சே, மதன்லால், விஷ்ணு கார்க்கோர், திகம்பர் பேட்கே ஆகியோர் அந்தக் கூட்டத்தில் பங்கெடுத்தனர். இதில் கடைசி இருவரை தவிர, மற்ற நால்வரும் பிராமணர்கள். 1948-ஆம் ஆண்டு ஜனவரி 19-ஆம் தேதி, டெல்லி 'கன்னாட் சர்க்கஸ்' பகுதியிலுள்ள மெரீனா ஹோட்டலில் தங்கி, இந்தச் சதித்திட்டத்தை வகுத்துள்ளனர். இந்திய பிரிவினைக்குப் பிறகு, பாகிஸ்தானுக்கு ஒப்பந்தப்படி கொடுக்க வேண்டிய 55 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, காந்தியடிகள் அப்போது உண்ணாவிரதம் இருந்தார். அந்த உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டு அவர், பாகிஸ்தான் செல்வதாக இருந்த நிலையில்தான், சதித்திட்டம் தீட்டப் பட்டு காந்தியடிகள் தீர்க்கப்பட்டார்.

### முன்னும் பின்னுமான வரலாறு

'இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நல்லிணக்கம் நிலவ வேண்டுமென்கிற காந்தியின் விருப்பம், இந்து ராஷ்டிராவுக்கு இடையூறாக இருக்கும்' என்று சங் பரிவார்கள் கருதினார்கள். அதனால், அவரைப் படுகொலை செய்தனர். காந்தி கொலையை ஏன் குறிப்பிட வேண்டி இருக்கிறது என்றால், அந்த நாட்களின் முன்னும், பின்னுமான வரலாற்றைப் பதிவுசெய்துள்ள பல ஆய்வுகளும், தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் அமைதியையும் பதிவுசெய்யத் தவறவில்லை.

பிரிவினைக் காலத்தில் வடஇந்தியாவில் மத அடிப்படையில் வன்முறை வெடித்தபோது, பெரியார் தென்னிந்தியாவில் அந்த மனநிலையே உருவாகாமல் தடுக்க தனது எழுத்துகள், உரைகள் மூலம் தொடர்ந்து எச்சரித்தார். மதம் அரசியலின் கருவியாக மாறினால், அதன் விளைவு வன்முறையாகும் என்பதை, இங்கு பதிய வைத்திருந்தார். இந்தப் பகுத்தறிவுச் சிந்தனை சமூகத்தில் ஒரு தடுப்புச்சுவர் போல செயல்பட்டது. காந்தி படுகொலையின்போது அவர் ஆற்றிய வானொலி உரையே அதற்குச் சான்றாகும்.

நீதிக்கட்சி காலந்தொட்டே, இங்கு நிலவிய சமூகநீதி, சாதி ஒழிப்பு, சமத்துவம் ஆகிய கொள்கைவழி அரசியல் காரணமாக மக்களின் கவனம் மத அடையாளமாக இல்லை. வடஇந்தியாவில் நடந்தது போல 'நாம் X அவர்கள்' என்ற மதப் பிளவு தமிழ்நாட்டில் வலுப்பெறாமல் இருந்தது. அதனால்தான் காந்தியின் சமாதான முயற்சிகளை ஆதரித்தும், அவர் படுகொலைக்குப் பின்பு, இந்த நாட்டிற்கே 'காந்தி நாடு' என்று பெயர் சூட்ட வேண்டுமென்றும் அறைகூவல் விடுத்தார் பெரியார்.

### கொடுஞ்செயலைச் சாடிய 'திராவிட நாடு'

1948-ஆம் ஆண்டு, பிப்ரவரி 1-ஆம் தேதி வெளியான 'திராவிட நாடு' இதழில், பெரியார் வழியில் ஓங்கி ஒலித்தது அண்ணாவின் குரல்.

'உத்தமரை இழந்தோம்; உலகம் எங்கும் அழுகுரல்' எனத் தலைப்பிட்டு, 'திராவிட நாடு' இதழை காந்தியடிகளுக்கான நினைவஞ்சலி இதழாகவே வெளியிட்டார் அண்ணா.

"எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம், எத்துணைப் பெரிய துரோகம் என்பதை எண்ணிப்பார்க்காமலே அந்த வெறியன் செய்த காரியம், ஏசுவைச் சிலுவையில் அறைந்த ரோம் வெறியர்களும் வெட்கித் தலைகுனியும்படியானதாகும். ரோம் ஆதிக்க வெறியர்களாவது, ஏசுவின் செல்வாக்கு பரவுவதால் தங்கள் ஆதிக்கம் கெடுகிறது என்று பொறாமையும் துவேஷமும் கொண்டதால், அக்கொடுஞ்செயல் புரிந்தனர். இந்த வெறியனோ, எந்த மாபெரும் தலைவரால் இவன் மதிப்புப் பெற்றானோ, இவனுடைய வாழ்வுக்கு ஓர் புது அந்தஸ்து கிடைத்ததோ. நாட்டுக்கு ஓர் புது நிலை ஏற்பட்டதோ, அந்த மாபெருந்தலைவரையல்லவா, மார்பிலே சுட்டுக் கொன்றான்!" என்று கோட்சேவின் கொடுஞ்செயலைக் கடுமையாகச் சாடினார்.

'அரசியல் ஆதாயத்துக்காக மதத்தைப் பயன்படுத்தக் கூடாது' என்ற தீர்மானகரமான சிந்தனைப்போக்கை திராவிடத் தலைவர்கள் இங்கு வலியுறுத்தி வந்துள்ளதை 'குடி அரசு', 'திராவிட நாடு' பதிவுகளிலிருந்தே அறிய முடிகிறது. மத வேறுபாடுகளைவிட ஒற்றுமையை வலியுறுத்திய அணுகுமுறைதான், அன்றைக்கு தமிழ்நாட்டில் பதற்றம் உருவாகாமல் தடுத்தது.



# பிரிவினைக் காலமும்... தமிழ்நாட்டு முஸ்லிம்களும்...


பிரிவினைக்கால கலவரங்களுக்கு பூகோளக் காரணங்களும் இருந்தன. குறிப்பாக, பிரிவினைக் காலத்தில் வடஇந்தியாவில் குறிப்பாக, பஞ்சாப், வங்காளம் ஆகிய இடங்களில் நடந்த இடப்பெயர்வு, கலவரங்களுக்குக் காரணங்களாக இருந்தன. அப்படியான சூழ்நிலை நிகழாத வகையில் தமிழ்நாடு புவியியல் ரீதியாகத் தூரமாக இருந்தது என்றாலும், தமிழ்நாட்டில் சிறுபான்மை மக்களிடம் அதுதொடர்பான பதற்றம் ஏற்பட்டதாக எந்தப் பதிவும் இல்லை. முஸ்லிம்கள் தங்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற வேண்டிய அவசியமும் இங்கு ஏற்படவில்லை.

வடஇந்தியாவில் முஸ்லிம் என்ற அடையாளம் அச்சமாக மாறிய நாட்களில், தமிழ்நாட்டில் முஸ்லிம் என்பது அந்நிய அடையாளமாக மாறவில்லை. அவர்கள் தமிழ்நாட்டின் மொழியில், பண்பாட்டில், வாழ்வியலில் கலந்துள்ளவர்கள் என்கிற அரசியல் இங்கு வேரூன்றி இருந்தது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமெனில், பிரிவினைக்காலத்தில் தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் அனுபவித்த அந்த அமைதி, திராவிடச் சிந்தனையின் வெற்றி என்றே பதிவு செய்கிறது வரலாறு.

> "பிரிவினைக்காலத்தில் தமிழ்நாட்டில் முஸ்லிம்கள் அனுபவித்த அந்த அமைதி, திராவிடச் சிந்தனையின் வெற்றி என்றே பதிவு செய்கிறது வரலாறு."

...நீளும்

## டெல்லியில் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு மாநாடு!



சுயமரியாதை இயக்க நூற்றாண்டை ஒட்டி புதுடெல்லியில், பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமும் 'ரீவாம்ப்' அமைப்பும் இணைந்து, 'பெரியாரின் சுயமரியாதை இயக்க நூற்றாண்டு வரலாறு, பாடங்கள் மற்றும் எதிர்காலப் பாதை' என்ற தலைப்பில், நடத்தும் இரண்டு நாள் மாநாடு இன்று தொடங்குகிறது. இதன் தொடக்க விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, டெல்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் சுகுமார் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்கள்.

இந்த மாநாட்டில், மொத்தம் எட்டு அமர்வுகளில், 50-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட உள்ளன. குறிப்பாக, 'திராவிட இயக்கத்தின் வரலாறு', 'பெண் விடுதலை', 'சமூக மேம்பாட்டில் கல்வியின் பங்கு', 'இட ஒதுக்கீடு', 'சாதி எதிர்ப்பு இயக்கங்கள்', 'திராவிடர் வாழ்வியல் முறை' மற்றும் 'திராவிட மாடலின் வளர்ச்சி' குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற உள்ளன. புதுடெல்லி, பெங்களூரு, மும்பை, ஹைதராபாத், புனே மற்றும் சென்னை போன்ற முன்னணி கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த பேராசிரியர்களும் ஆய்வு மாணவர்களும் இதில் பங்கேற்கின்றனர். நிறைவு விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் பி.வில்சன் மற்றும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீ.அன்புராஜ் மற்றும் ஜெ.என்.யு. பேராசிரியர் விவேக்குமார் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

சாதி, பெண்ணடிமையற்ற, பகுத்தறிவு சார்ந்த ஒரு சமத்துவ சமூகத்தை உருவாக்குவதில், சுயமரியாதை இயக்கம் கற்றுக்கொடுத்த பாடங்களை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்வதை நோக்கமாகக்கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இம்மாநாடு. பெரியாரியலை அகில இந்திய அளவில் எடுத்துச்செல்வதற்கான அடித்தளமாகவும் இந்த மாநாடு அமைகிறது.

## ஃப்ளாஷ்பேக்

### "நான் இளைஞர் அணியா?"



2016-ஆம் ஆண்டு, எனது 61-வது பிறந்தநாளன்று, மனைவி ஞானசௌந்தரியுடன் கோபாலபுரம் சென்று தலைவர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றபோது எடுத்த படம். அன்று காலை அண்ணா அறிவாலயத்தில், அன்றைய பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களிடம் தேர்தல் நிதி அளித்து வாழ்த்துப் பெற்றிருந்தேன். நிதி அளிப்பதற்காக, அறிவாலயத்தில் வாங்கிய உறையில் இளைஞர் அணி பெயர் அச்சிடப்பட்டிருந்தது. மாலையில் கோபாலபுரத்தில் தலைவரிடம் அந்த உறையில் தேர்தல் நிதி அளித்தபோது, உறையைப் பார்த்தவர், "நான் இளைஞர் அணியா?" என நகைச்சுவையுடன் கேட்டு, வாழ்த்தியது மறக்க முடியாத நினைவு. ஒவ்வொருவருக்கும் உன்னத நினைவுகளை அளித்தவர் நம் தலைவர்.



கே.செல்வராஜ்

- கே.செல்வராஜ், அவைத் தலைவர், 117-வது வட்டம், ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, சென்னை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## சூழ்ச்சி வளையங்கள் முறியடிப்பு!

1971-ஆம் ஆண்டு, கழகத்தின் தலைமையில், முற்போக்கு கூட்டணி அமைந்தது. சென்னை, சைதாப்பேட்டைத் தொகுதியில் போட்டியிட்டார் கழகத் தலைவர் கலைஞர். தொகுதி கழகத் தேர்தல் அலுவலகத்தை போலீஸார் சுற்றி வளைத்துக்கொண்டும், உள்ளே நுழைந்து சோதனையிடுவதையும் வழக்கமாக வைத்திருந்தனர். தேர்தல் பணியாற்றிய தோழர்களை மிரட்டுகிற அளவுக்கு, அதிகாரிகளால் தூண்டிவிடப்பட்டனர். அப்படியான சூழ்ச்சி வளையங்களையெல்லாம் உடைத்தெறிந்து, முற்போக்கு கூட்டணி வெற்றிபெற்றது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.